ஏற்கெனவே நான் பலமுறை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன். ரூ.140 கோடி செலவில் கிட்டத்தட்ட 77 செயற்குறிப்புகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிற்கு இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் கூட இன்னும் நிதியுதவி அளிக்கவில்லை. நிச்சயமாக அவர்கள் இந்த ஆண்டில் அளிப்பார்கள் என்று கருதுகின்றோம். அவ்வாறு அளிக்கின்ற பட்சத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. மீண்டும் அதையே சொல்கிறேன். விரைவாக வேடசந்தூருக்கு நீதிமன்றம் கட்டித்தந்து உதவும்படி அன்போடு வேண்டிக் கேட்டு, அம்மாவினுடைய ஆசியுடன் அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 266, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**266—**

**மருத்துவமனை**

***23215—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

2003 ஏப்ரல் 21]

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருவொற்றியூர் தொகுதியிலே மருத்துவமனை அமைப்பது சம்பந்தமாக கடந்த டிசம்பர் மாதம் பார்வையிட்டதன் பேரிலே — அன்னை சிவகாமி நகர், சுப்பிரமணிய நகர், எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, புழல் ஒன்றியத்திலுள்ள பேரூராட்சியின் பின்புறம் ஒன்றும், திருவொற்றியூர் நகராட்சியினுடைய, ஆரம்ப சுகாதார மையம் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டியும் அந்தப் பகுதியிலே இடவசதி வேண்டி, பார்வையிட்டதன் பேரிலே — நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருவொற்றியூர் நகராட்சியில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பது சம்பந்தமாக பரிசீலனை செய்வோம் என்றும் சொன்னார்கள். திருவொற்றியூர் பகுதியிலே உள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்குப் பதிலாக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பதன் மூலமாக — சென்னையில் இருக்கின்ற அரசு பொது மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்து செல்வதில் அதிகமான வகையில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற காரணத்தாலும், திருவொற்றியூர் பகுதி மட்டுமல்லாமல், திருவள்ளூர் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற நோயாளிகள் அங்கேயே மருத்துவம் பார்த்துக்கொள்வதன் மூலமாக, சென்னை பொது மருத்துவமனைக்கு வரும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கின்ற முறையிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியிலே—திருவொற்றியூர் பகுதியிலே 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்தப் பகுதியிலே, மருத்துவமனை அமைக்கப்படுமேயானால், பொது மக்களுக்கு ஏதுவானதொரு பயனுள்ள சூழ்நிலை உருவாகும் என்பதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே மருத்துவமனை அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக கிராமப்புற மக்களுக்கு Organised Health Service கிடைப்பதைப் போல, நகரப் பகுதியிலே இப்போது அப்படிப்பட்ட ஓர் அமைப்பு இல்லை. தற்போது நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில்

Maternity Centres, தாய் சேய் நல விடுதிகள் மட்டும், அந்த நிலையத்திலே இருந்து பிரசவத்தை கவனித்துக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம், எப்படி சுகாதாரச் சேவையை வழங்கி வருகிறதோ, அதேபோன்ற ஓர் அமைப்பு நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலும் இருக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்பி, அதன் அடிப்படையிலே, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு இலட்சம் ஜனத் தொகைக்கு ஒரு Urban Primary Health Centre நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை, அமைக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆலோசனை வழங்கி, அந்த அடிப்படையிலே எங்களுடைய சுகாதாரத் துறை இப்போது நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலேயும், -- எப்படி கிராமப்புறங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் வீடுகளுக்கே சென்று சுகாதாரச் சேவையை அளித்து வருகிறதோ, அதுபோன்ற நோக்கத்தோடு, இதுபோன்ற நகர்ப் பகுதிகளிலேயுள்ள, குறிப்பாக,-- நகர்ப் பகுதிகளிலேயுள்ள குடிசைப் பகுதியிலே வாழ்கிற ஏழையெளிய மக்களுக்கு, சுகாதாரச் சேவையை அளிக்கிற வகையில் Urban Primary Health Centres அமைப்பதற்கு இப்போது நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி பரிசீலனையில் இருந்து வருகிற அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருவொற்றியூர் பகுதிக்கு, நிச்சயமாக Urban Primary Health Centre அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *267*, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**267—**

**மருத்துவர் நியமனம்**

**•24499—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—